

திருவாரூர் மாவட்டம் பேரளம் பேரூர் செயலாளர் சிவ.தியாகு இல்லத் திருமண நிகழ்வில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று , மணமக்கள் ராஜ்குமார் – ஐஸ்வர்யா இணையரை வாழ்த்தினார். உடன் ஒன்றிய செயலாளர் கேப்டன்.செல்வராஜ், எஸ்.ஜோதிராமன, வே. மனோகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் பால.முத்து மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தினர்.



கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி, கோவை மாவட்டம், செல்வபுரம் பகுதி, சிந்தாமணி குளம் அருகில் அமைந்துள்ள குடியிருப்புக்களில் மழை நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், கோவை மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா ஆய்வு மேற்கொண்டனர். இதில் மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து உள்ளனர்.

கடலூர் விருத்தாசலம் அருகே

நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் முளைத்து நாசமாகும் நெல்மணிகள்!

ரீல்ஸ் த.வெ.க. அரசின் அலட்சியம்!



கடலூர், அக். 27 - கடலூர் மாவட்டம் ,விருத்தாசலம் அடுத்த கருவேப்பிலங்குறிச்சி அருகேயுள்ள டி.வி.புத்தூர் கிராமத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பல ஆயிரம் நெல் மூட்டை கள், திறந்த வெளி வளாகத்திலேயே அடுக்கி வைக்கப்பட்டன.

மழையில் இருந்து பாதுகாக்க தார்ப்பாய்கள் போர்த்தப் பட்டிருந்த போதிலும்,பல வாரங்களாக மூட்டைகள் அங்கேயே தேங்கிக் கிடந்ததால்,எலிகள் மற்றும் பூச்சிகள் தார்ப்பாய்களை ஆங்காங்கே கடித்துக் குதறி துளையிட்டுள்ளன.

அத்துடன் எலிகள் மூட்டை களுக்குள் புகுந்து நெல்மணிகளைத் தின்று சேதப்படுத்தி வந்தன. இந்நிலையில், கடந்த சில தினங்க ளாக பெய்து வரும் கனமழை காரணமாக, தார்ப்பாய் துளைகள் வழியாக மழைநீர் உள்ளே புகுந்து, நெல் மூட்டைகள் நனைந்து சேதமடைந்துள்ளன.

குறிப்பாக, மேல் வரிசை மூட்டைகளில் இருந்த நெல்மணிகள் மழைநீரில் ஊறி தற்போது பசுமையாக முளைத்து வெளியே வரத் தொடங்கியுள்ளன.

பொதுவாக இந்த நெல் மணிகள், காட்பாடி, திருச்சி, மதுரை, சென்னை, தென்காசி போன்ற பகுதிகளில் உள்ள அரிசி அரவை ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அங்கு அரிசியாக மாற்றப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ரேஷன் கடைகள் மூலம் ஏழை, எளிய பொதுமக்களுக்கு விநியோகிக் கப்படுகிறது. இந்த நெல்மணிகளை அப்படியே அரவைக்கு அனுப்பினால், பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் ரேஷன் அரிசியின் தரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது.

எனவே, டி.வி.புத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை போர்க் கால அடிப்படையில் பாது காப்பான அரசு சேமிப்புக் கிடங்குகளுக்கு மாற்றவேண் டும் என விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில்

டீக்கடைகளில் உணவு பண்டங்கள் - டீ காபி விலை கடும் உயர்வு!

பொதுமக்கள் அதிர்ச்சி!

சிவகங்கை, அக். 27 - கடந்த சில மாதங்களாக த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் விலைவாசிகள் அதிக அளவில் உயர்ந்து வருகின்றது. இதில் சிவகங்கை மாவட்ட தலைநகர் சிவகங்கையில் ஒரு மாதத்தில் ஓட்டல்களில் உணவுப் பொருட்கள் விலை கடுமையாக அமைந்துள்ளது. இதேபோல் டீ ,காபி விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் சாதாரண ஏழை, எளிய, நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஹோட்டல்களில் இட்லி 10 ரூபாயில் இருந்து ரூபாய் 15,20 தோசை ரூபாய் 40லிருந்து 60,70 பொங்கல் ரூபாய் 40லிருந்து 60 வரை,வடை ரூபாய் 10ல் இருந்து 15 , 20 வரை,சாம்பார் வடை ரூபாய் 15 லிருந்து 25 வரை. சாப்பாடு 100லிருந்து ரூபாய் 120, ,140 பார்சல் சாப்பாடு ரூபாய் 150 என்று பல்வேறு வகையில் உணவுப் பண்டங்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. விலை உயர்வு குறித்து விலை எந்த ஹோட்டலிலும் அறிவிப்பு பலகை ஏதும் வைக்கப்படவில்லை.

இதே போல் டீக்கடை காப்பி கடைகளில் ரூபாய்10லிருந்து17. ,என்றும் காபி ரூபாய் 20லிருந்து ,23,25 வரைக்கும் உயர்ந்துள்ளது. இதனால் டீ ,காபி அருந்தும் காபி பிரியர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஒரு நபர் தினசரி இரண்டு வேலை காப்பி இரண்டு வேளை டீ அருந்தியவர்கள் தற்பொழுது விலை உயர்வினால் ஒரு வேலை டீ , ஒருவேளை காப்பி என்று மாறி உள்ளார்கள். உணவுப் பண்டங்கள் விலை உயர்வு குறித்து எந்த ஹோட்டலிலும் அறிவிப்பு பலகை வைக்கப்படவில்லை .

இதே போல் மாவட்டத்தில் மானாமதுரை, திருப்புவனம், சிவகங்கை, இளையான்குடி, காளையார் கோவில்,, காரைக்குடி தேவகோட்டை, திருப்பத்தூர், ஆகிய ஊர்களில் உள்ள ஓட்டல்களிலும் டீக்கடையிலும் கடுமையான அளவுக்கு விலை யேற்றப் பட்டுள்ளது . இதற்கு காரணம் அரிசி, பருப்பு, எண்ணெய்,பால் காப்பித்தூள் போன்ற பொருட்கள் விலை அதிகரித்து வருகிறது. என்று ஓட்டல் உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அடிக்கடி விலை உயர்வு ஏற்றப்படுவதை தவிர்க்கப்பட வேண்டும் .முறையாக உணவு பண்டங்கள் விலை பொதுமக்களுக்கு தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும் .

இது குறித்து மாவட்ட நிர்வாகம், மாவட்ட உணவு கட்டுப்பாடு துறை, மாவட்ட வழங்கல் துறை ,உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். எந்தவித மக்கள் பிரச்சினையையும் கண்டு கொள்ளாத அளவில் மாவட்ட நிர்வாகம் செயல்படுவது பொதுமக்கள் இடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கோவை - சேலம் மெமு ரயில்களை மீண்டும் இயக்க கோரிக்கை!

தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு கே.ஈஸ்வரசாமி எம்.பி., கடிதம்!



கோவை, அக். 27 - கோவை மற்றும் சேலம் இடையே இயக்கப்பட்டு திடீரென நிறுத்தப்பட்ட மெமு பயணிகள் ரயில்களை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஈஸ்வரசாமி தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோவை சேலம் இடையே இயக்கப்பட்டு வந்த மெமு ரயில்கள் கடந்த 4 ஆண்டுகளாக திடீரெனநிறுத்தப்பட்டது. இதனால் பொதுமக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து, சென்னிமலை மற்றும் பெருந்துறை பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கூறுகையில் : தினமும் காலை 9.05 மணிக்கு கோவையில் இருந்து மெமு ரயில் புறப்பட்டு திருப்பூர், ஊத்துக்குளி, விஜயமங்கலம், ஈங்கூர், பெருந்துறை ஆர்.எஸ் மற்றும் ஈரோடு வழியாக மதியம் 1.00 மணிக்கு சேலத்தை அடையும்.

அதேபோல் மறுமார்க்கம் சேலத்தில் இருந்து மதியம் 1.45 மணிக்கு புறப்பட்டு மீண்டும் மாலையில் கோவையை அடையும். ஆனால் தண்டவாள பராமரிப்பு என்று கூறி இந்த ரயிலை கடந்த 4 ஆண்டுகளாக நிறுத்தி விட்டனர். கோவையிலிருந்து சேலம் வரை அனைத்து ரயில் நிலையங்களிலும் நின்று சென்ற இந்த ரயிலை திடீரென நிறுத்தி விட்டதால் நாங்கள் சேலம் அல்லது கோவை போன்ற நகரங்களுக்கு செல்வதற்காக சிரமப்பட்டு வருகிறோம். அதனால் இந்த ரயிலை மீண்டும் உடனடியாக இயக்க வேண்டும் என்றனர்.

இதுகுறித்து, தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஈஸ்வரசாமி அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: கோவை சேலம் இடையே இயக்கப்பட்டு வந்த மெமு ரயில்கள் (வண்டி எண்கள் : 06802 மற்றும் 06803) ஆகியவை தினசரி ஏராளமான பயணிகளுக்கு மிக முக்கிய மான போக்குவரத்து வசதியாக செயல்பட்டு வந்தன.

கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் இந்த வழித்தடத்தில் உள்ள பல்வேறு நிலையங்களுக்கு இடையே பயணிக்கும் பொதுமக்கள், பணிக்கு செல்வோர், தினசரி பயணிகள், மாணவர்கள் மற்றும் எளிய நடுத்தர மக்கள் இந்த ரயில் சேவையை பெரிதும் நம்பி இருந்தனர்.

குறிப்பாக, பொது மக்களுக்கு ஏற்ற சரியான நேர அட்டவணை மற்றும் குறைவான பயண கட்டணம் ஆகியவற்றின் காரணமாக, பொருளாதார ரீதியாக பின்தங்கிய பயணிகளுக்கு இந்த ரயில்கள் பெரும் பயனளித்து வந்தன. இந்நிலையில், இந்த ரயில் சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் தினசரி பயணிகள் பயணிக பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு செல்வோருக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், மாற்று போக்குவரத்து முறைகளை நாட வேண்டிய கட்டாயத்தால் கூடுதல் செலவும் அலைச்சலும் ஏற்படுகிறது.

எனவே, பொதுமக்களின் நலன் மற்றும் தினசரி பயணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தை உடனடியாக பரிசளித்து நிறுத்தப்பட்ட கோவை சேலம் மெமு ரயில்களை விரைந்து மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் எந்நாளும் எங்கள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த திராவிட மாடல் ஆட்சியில் குடிமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 74 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டிடத்தை உடுமலை சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் திறந்து வைத்தார். இதில் குடிமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் சா.ராஜமாணிக்கம் உள்பட ஆசிரியப் பெருமக்கள், மாணவ மாணவிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா டி. குலசேகரன்
அக்டோபர் 27 (2001)



காஞ்சிபுரம் மாவட்டம், வாலாசாபாத் ஒன்றியம், பரந்தூர் ஒன்றியத்தில் கிளைச் செயலாளர், ஒன்றிய பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி, தலைமை பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

பஞ்சாயத்து தலைவர், ஒன்றிய பெருந்தலைவர், மாவட்ட வளர்ச்சி குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை பணி நிலையம் தலைவர் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளில் ஈடுபட்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர். இது தவிர கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.